செ.வெ.எண்:37 நாள்: 25.01.2017

# நாகப்பட்டினம் மாவட்டம்
# 7வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் துவக்கி வைத்தார்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 7வது தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் இன்று 25.01.2017 துவக்கி வைத்தார். கல்லூரி மாணவ மாணவிகள் பலர் கலந்து கொண்ட இந்த வாக்காளர் தின விழிப்புணர்வுப் பேரணி நாகப்பட்டினம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கி புதிய பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது.

பின்னர் நாகப்பட்டினம் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் 7வது தேசிய வாக்காளர் விழிப்புணர்வு தினம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் தலைமையில் நடைபெற்றது. விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூத்த வாக்காளர்களுக்கு பொன்னாடை அணிவித்து பிளாஸ்டிக் வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை வழங்கி கௌரவித்தார். தற்போது 18 வயது நிறைவடைந்து வாக்களிக்கும் தகுதி பெற்ற புதிய வாக்காளர்களுக்கும் பிளாஸ்டிக் வண்ண வாக்காளர் அடையாள அட்டையினை வழங்கி அனைவரும் தவறாது வாக்களிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

விழாவில் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் “ **ஜனநாயகத்தின் மீது இணங்கி நடக்கும் நம்பிக்கையுடைய இந்திய குடிமக்களாகிய நாம் நாட்டின் ஜனநாயக மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல்களின் மாண்பையும் நிலைநிறுத்துவோம் என்றும், மேலும் ஒவ்வொரு தேர்தலிலும் அச்சமின்றியும், மதம், இனம், ஜாதி, வகுப்பு, மொழி ஆகியவற்றின் தாக்கங்களுக்கு ஆட்படாமலும் அல்லது எந்தவொரு தூண்டுதலுமின்றியும் வாக்களிப்போம் என்றும் உறுதி மொழிகிறோம்”** என்றவாறு தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை வாசிக்க, அவரைப் பின்தொடர்ந்து, அரசு அலுவலர்கள் அனைவரும் தேசிய வாக்காளர் தின விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,
“ இந்திய அரசு 2011 ஆம் ஆண்டு முதல் ஜனவரி 25 ஆம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக அறிவித்து சிறப்பாக கொண்டாடிவருகிறது. இவ்வருடம் 7வது தேசிய வாக்காளர் தினமாகும். இவ்வருடம் “இளைஞர்கள் மற்றும் எதிர்கால வாக்காளர்களுக்கு அதிகாரம் அளித்தல்” எனும் தலைப்பில் நாடுமுழுவதும் 7வது தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டுவருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மொத்தம் 1502 வாக்கு சாவடிகள் உள்ளன. மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளில் முறையே 160.சீர்காழி(ஆண்:**1,16,900**,பெண்: **1,19,433,** இதரர்:**4**), 161.மயிலாடுதுறை(ஆண்:

**1,18,887**,பெண்: **1,19,441**, இதரர்: **8**), 162.பூம்புகார்(ஆண்: **1,28,943**,பெண்: **1,30,027**, இதரர்: **2**), 163.நாகப்பட்டினம்(ஆண்: **91,575**,பெண்: **95,377** இதரர்: **2**), 164.கீழ்வேளுர்(ஆண்: **82,515**,பெண்: **84,404**, இதரர்: **1**),164.வேதாரண்யம்(ஆண்: **90,376**,பெண்: **93,257**,இதரர்: **1**) என மொத்தம் **6,29,196** ஆண்கள், **6,41,939** பெண்கள், இதரர் **18** பேர் உட்பட**12,71,153** வாக்காளர்கள் உள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11.9.2016 மற்றும் 25.9.2016 ஆகிய இரு சிறப்பு முகாம்கள் 2016 செப்டம்பர் மாதத்தில பொது மக்களிடம் இருந்து 29148 பெயர் சேர்கைக்கான விண்ணப்பங்களும் நீக்கலுக்காக 2572 விண்ணப்பங்களும் திருத்த்திற்காக 8566 விண்ணப்பங்களும் முகவரி மாற்றத்திற்காக 3195 விண்ணப்பபங்களும் பெறப்பட்டன. இவற்றுள் 27504 பெயர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் , 2289 நீக்களுக்கான விண்ணப்பங்கள், 7658 திருத்த்திற்கான விண்ணப்பங்கள் மற்றும் முகவரி மாற்றத்திற்கான 2317 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

சிறப்பு சுருக்க திருத்தம் - 2017 இல் 12,832 ஆண்கள் மற்றும் 14,669 பெண்கள் மற்றும் இதர வகுப்பினர் 3 உட்பட மொத்தம் 27,504 வாக்காளர்கள் புதிதாக வாக்காளர் பட்டியலில் இணைந்துள்ளனர்.

.நாகப்பட்டினம் மாவட்டத்தில் ஆண் வாக்காளர்களைவிட பெண் வாக்காளர்கள் 12,743 பேர் அதிகமாக உள்ளனர்.

மேலும் பொதுமக்கள் தங்களின் பெயர்சேர்த்தல், நீக்கம், திருத்தம் மற்றும் முகவரி மாற்றத்திற்கான உரிய படிவங்களை தொடர்புடைய அலுவலகங்களில் சமர்பித்தோ அல்லது www.elections.tn.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன் முலம் விண்ணப்பித்தோ பயன் பெறலாம்" என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

முன்னதாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மகளிர் திட்டம் சார்பில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பங்கேற்ற தேசிய வாக்காளர் தினம் குறித்த விழிப்புணர்வு கோலப்போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சு.பழனிசாமி,இ.ஆ.ப அவர்கள் பார்வையிட்டார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.சி.முத்துமாரி. வருவாய் கோட்டாட்சியர் திரு.சி.கண்ணன், மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் திருமதி.பி.மதுமதி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மீ.செல்வகுமார், வட்டாட்சியர் திரு.தமிம் அன்சாரி, வட்டாட்சியர்(தேர்தல்)திரு.இராமச்சந்திரன், மற்றும் அரசு அலுவலாகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**